தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட சட்ட மன்ற மேலவையின் ஐம்பத்தி ஒன்றுவது கூட்டத் தொடர்.

வியாழக் கிழமை, 1975 அக்டோபர் 23.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைலத் குறிக்கும்.)

1. இரங்கற் குறிப்பு.

மேலவை முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் ஜேம்ஸ் டோக், டி. துரை ராஜ் பிள்ளை, பி. வெங்கடாசல தேவர் ஆகியோர் மறைவு குறித்து.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : முன்னாள் மேலவை உறுப்பினர்களான திருவாளர்கள் ஜேம்ஸ் டோக் 9-7-1975 அன்று இங்கிலாந்திலும், டி. துரைராஜ் பிள்ளை 14-10-1975 அன்று வேலூரிலும், பி. வெங்கடாசல தேவர் 18-10-1975 அன்று சென்னையிலும் இயற்கை எய்திய செய்தியை வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஜேம்ஸ் டோக் 1946 ஏப்ரல் முதல் ஆகஸ்டு வரையிலும், திரு. டி. துரைராஜ் பிள்ளை 1958 முதல் 1966 வரையிலும், திரு. பி. வெங்கடாசல தேவர் 1962 முதல் 1968 வரையிலும் இம் மேலவை உறுப்பினர்களாக இருந்தனர்.

அவர்களை இழந்து துயருற்றிருக்கும் அவர்களது குடும்பத்தினருக்கு நமது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் உறுப்பினர்கள் இரண்டு நிமிடம் மவுனமாக எழுந்து நிற்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

(அவையினர் இரண்டு நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)